**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ்,** B.A., B.L.,
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**
**2024 ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண்.3/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.148/2017**

------

1. கருப்பையா (28/24)
   த/பெ.பிச்சை,
   தெற்கு தெரு,
   வெள்ளிக்குறிச்சி கிராமம்,
   மானாமதுரை.
2. முத்துராமலிங்கம் (37/24)
   த/பெ.மலைச்சாமி,
   தெற்கு தெரு,
   வெள்ளிக்குறிச்சி கிராமம்,
   மானாமதுரை.
3. அழகர்சாமி (37/24)
   த/பெ.வெள்ளைச்சாமி,
   தெற்கு தெரு,
   வெள்ளிக்குறிச்சி கிராமம்,
   மானாமதுரை.

(மேற்படியார்கள் வெள்ளிக்குறிச்சி கிராமத்து சேர்ந்த முனியன் கோவில் சாமிகும்பிடும் கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில்) ..... 1 முதல் 3 மனுதாரர்கள்
/1 முதல் 3 Proposed பிரதிவாதிகள்

..எதிர்..

1. சின்னப்பொண்ணு
2. மூக்குச்சாமி(இறப்பு)
3. பிரபாகரன் ..... எதிர்மனுதார்/வாதிகள்.

தங்கச்சாமி ..... எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனு என்முன்பு 28.10.2024 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 1ம்

எதிர்மனுதாரர் இம்மனுவிலிருந்து தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 1, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜாகியும் உள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 1 ரூல். 8 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட 1 முதல் 3 மனுதார்கள்/பிரபோஸ்ட் 1 முதல் 3 பிரதிவாதிகளை வெள்ளிக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த முனியன் கோவில் சாமி கும்பிடும் கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாவா வழக்கை நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்:**

கிராமத்தில் 1800 நபர்கள் உள்ள நிலையில், அவர்கள் அனைவரும் தரப்பினர்களாக இருந்து வழக்கு நடத்த இயலாது. அதனால் மனுதார்களை மேற்படி வெள்ளிக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த முனியன் கோவில் சாமி கும்பிடும் கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாவா வழக்கை நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே 3ம் மனுதாரர் மற்றும் மற்ற மனுதார்களையும் வெள்ளிக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த முனியன் கோவில் சாமி கும்பிடும் கிராம பொதுமக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாவா வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமானதாக உள்ளது என்பதால் மனுதாரரால் மனு தாக்கல்.

**3. 1, 3 எதிர்மனுதார்கள் தரப்பில் மறுப்புரையின் சுருக்கம்:**

தாவா 3ம் இலக்க சொத்து உள்ளிட்ட மொத்த சொத்திற்கும் தாவா சொத்துள்ள கிராமத்தில் உள்ள குடும்பங்களில் பல குடும்பங்களை சேர்ந்தவர்கள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு அசல் வழக்கு எண்.180/1972 என்ற வழக்கும் கடந்த 1972ம் வருடம் முதல் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக உயர்நீதிமன்றம் வரை வழக்குகள் நடைபெற்று நீதிமன்றத்தின் மூலமாக ஒப்படைப்பு பெற்றுள்ள நிலையில் அவைகள் அனைத்தும் கிராமத்தினர்கள் அனைவருக்கும் தெரிந்திருந்தும் தங்களுக்கு தற்பொழுது தான் தெரியவந்ததாக பொய்யாக நீதிமன்ற தீர்ப்பின் பலனை வாதிகள் அனுபவிக்க கூடாது என்ற கெட்ட உள்நோக்கத்துடன் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கில் சேர்ந்திட கோருவது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

**4.** 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் இல்லை.

**6. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

**6.1.** மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக உள்ளது. கிராமத்தில் வழக்கமாக நிலவி வரும் உரிமை குறித்து, அக்கிராமத்தில் வசிப்பவர்களின் சார்பாக ஒருவர் பிரதிநிதித்துவ முறையில் வழங்கிடலாம் என்றும், அக்கிராமத்தில் வசிக்கும் அனைவரும் அவ்வழக்கில் சேர வேண்டுமென்ற கட்டாயமில்லை என்றும் மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் Purna Chandra V. Durlav AIR 1984 Cal. 10. என்ற வழக்கில் நிலைநிறுத்தியதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**6.2.** மேலும் கிராமத்தில் உள்ள கோயில்கள் மிக

முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மக்கள் கிராமக்கடவுள் மேல் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். இவைகளெல்லாம் கருத்தில் கொண்டு இவ்வழக்கில் கிராமத்தினரையும் ஒரு தரப்பினராக சேர்த்து அவர்களுடைய தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டால் தான் இவ்வழக்கில் நியாயமான தீர்ப்பு வழங்க முடியும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அப்பொழுது தான் உண்மை நிலவரம் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.3.** மேலும் Multiplicity of Proceedings-யை தடுப்பதும் நோக்கமாகவுள்ளது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் அக்டோபர் 28-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.S.முகம்மது யூசுப் நவாஸ், 28.10.24
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் - இல்லை
மனுதாரர் தரப்பில் சான்றவாணங்கள் - இல்லை
எதிர்மனுதார்கள் தரப்பில் சாட்சிகள்- இல்லை
எதிர்மனுதார்கள் தரப்பில் சான்றாவணங்கள் - இல்லை

ஒம்/திரு.S.முகம்மது யூசுப் நவாஸ், 28.10.24
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

DISTRICT MUNSIF COURT
MANAMADURAI

ORDER

I.A.No. 3/2024
in
OS. No.148/2017

Dated:28.10.2024